## சர்வேத் துறை

*227 வினா.—திரு. வி. கே. கோதண்டராமன் : மதிப்பிற்குரிய உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

ரெவின்யூ டிபார்ட்மெண்டில் வேலை பார்க்கும் சர்வேயர்களை வேலையிலிருந்து நீக்குவதற்கான உத்தரவு போடப்பட்டிருப்பது உண்மையா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இல்லை.

திரு. என். சங்கரய்யா : சர்வே இலாகாவில் வேலை செய்யக்கூடியவர்கள் அந்த வேலையை இப்பொழுது புதியதாக நல்ல முறையில் நடத்திக் கொடுக்கக்கூடிய விதத்தில் அந்த இலாகாவை துரிதப் படுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அதற்கான நடவடிக்கை எடுப்பது பற்றி ரெவின்யூ போர்டு பரிந்துரைகளை வழங்கியிருக்கிறது. இந்தத் துறையின் தலைமை நிலையத்தை மாற்றி அமைப்பதற்கும், ரெவின்யூ போர்டு நேரடி நிர்வாகத்தில் இல்லாமல் டெபுடி டைரக்டர் ஆப் சர்வே அண்டு லேண்ட் ரிகார்ட்ஸ் என்ற அதிகாரியின்கீழ் இந்த அலுவலகம் செயல்படுவதற்கும் பரிந்துரைகள் செய்யப்பட்டிருக்கின்றன. அதன்மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

## குடும்பக் கார்டு முறை

*228 வினா.—திரு. ஏ. அ. சுப்பராஜா : மதிப்பிற்குரிய உணவு-வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

உணவு விநியோகம் சம்பந்தமாக, நமது மாநிலத்தில் சில கிராமங்களில் குடும்பக் கார்டுகள் வழங்கப்பட்டும், சிலவற்றில் வழங்கப்படாமலும் இருப்பதன் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அரிசி பற்றுக்குறையாக உள்ள பகுதிகளுக்குப் போதிய அளவில் அரிசியைத் தவறாமல் அனுப்பிவைத்து அங்குள்ள மக்களுக்குக் குறைந்த அளவு அரிசியாவது நியாயவிலைகளில் கிடைப்பதை உறுதி செய்யும் நோக்கத்துடன்தான் அரசு குடும்பக் கார்டு முறையைத் தொடங்கியது. அத்தகைய பற்றுக்குறைப் பகுதிகளில் வாழும் மக்கள் வணிகர்களின் தயவில் இருக்க வேண்டிய நிலை இந்த ஏற்பாட்டின் மூலம் நீக்கப்படுகிறது. அத்துடன் வணிகர்கள் தங்கள் விருப்பம்போல் விலைகளை உயர்த்துவதற்கான வாய்ப்பும் தவிர்க்கப்படுகிறது. வெளிச் சந்தையில் போதுமான அளவிற்கு அரிசி கிடைக்காத பகுதிகளில் மட்டுமே குடும்பக் கார்டு முறை நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. அரிசி உற்பத்தி உபரியாகவும், மக்கள்